[1973 நவம்பர் 20

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இது பௌல்ட்ரி டெவலப்மெண்ட் பற்றியது. கோழி இல்லாத இடங்களில் கோழிப் பண்ணை வைப்பது என்பதுபற்றி அல்ல. தரமான கோழிக் குஞ்சுகளைத் தயாரித்து, கோழி வளர்க்க விரும்புகிறவர்களுக்குக் கொடுப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட நிறுவனம் இது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 231.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : It is a very important question. As egg is selling at 42 P., people are suffering a lot. When such an important question is answered, members should be given an opportunity to put supplementaries. We are raising our hands, but we are not able to catch the eye of the Hon. Speaker. We feel really sorry for it.

Levy of Pilgrim tax in Thiruvarangam.

* 231 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Local Administration, be pleased to state whether this Government have recommended to the Centre to permit the Srirangam Municipality to levy pilgrim tax throughout the year during 1972?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இல்லை.

தொழில் வரி வசூல்

* 232 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தொழில் வரியை வேலை செய்யும் ஊழியர்களின் சம்பளத்திலேயே பிடித்துக் கொள்வது பற்றி அரசு ஆலோசித்து வருகின்றதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஆம்.

திரு. என். கிட்டப்பா : அமைச்சர் அவர்கள் ஆம் என்று பதில் அளித்தார்கள். எந்த வகையிலே செயல்படுத்த இருக்கிறார்கள் என்பதை அறிவிக்க இயலுமா ?

1973 நவம்பர் 20]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : மதுரை மாநகராட்சிச் சட்டம் 1971-ல் தொழில் வரியை, பணியாளரின் ஊதியத்தில் கழிவு செய்து, அதனை மாநகராட்சி அதிகாரியிடம் செலுத்த வேண்டும் என்று வரையறுக்கப்பட்டுள்ளது. அம்முறையை சென்னை மாநகராட்சி சட்டம் 1919-லும், தமிழ்நாடு நகராட்சிச் சட்டம் 1920-லும் கொண்டு வர உத்தேசிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு ஊராட்சி சட்டம் 1958, பிரிவு 121 கீழ் வேலை கொடுப்பவர் தொழில் வரிக்குட்பட்ட பணியாளரின் குடியிருப்பு முகவரியைத் தெரிவிக்க வேண்டுமெனவும், உள்ளாட்சி அதிகாரிக்குச் செலுத்த வேண்டிய தொழில் வரியினைப் பணியாளரின் சம்பளத்திலோ அல்லது ஊதியத்திலோ பிடித்தம் செய்து அதனை மேற்கூறிய அதிகாரியிடம் செலுத்த வேண்டுமென விதிகள் கொண்டுவரத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. சட்டத்தில் தேவையான மாற்றங்கள் விரைவில் செயலாக்கப்படும்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, in view of the fact that so many new taxes have come up and the total amount of the professional tax collected is so small and also the collection charges are so high, will the Government think of dropping the professional tax completely, as many other State Governments are reported to have done ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தற்சமயம் அப்படிப் பட்ட உத்தேசம் எதுவும் இல்லை.

மெரீனா கடற்கரையருகே சுரங்கப் பாதை

***233 வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகர் மெரீனா கடற்கரைச் சாலையில் சுரங்கப் பாதை அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அச் சுரங்கப் பாதையை ரூ. 7.67 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் சென்னை மாநகராட்சி மன்றம் அமைக்க நிர்வாக ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது.